This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

சுராவின்

# தமிழ் உரைநூல்

## 7 ஆம் வகுப்பு

முழு ஆண்டு கையேடு

முதல் பருவம் | இரண்டாம் பருவம் | மூன்றாம் பருவம்

புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி, தயாரிக்கப்பட்டுள்ளது.

### சிறப்பம்சங்கள்

- பாடப்பகுதிகளிலுள்ள எல்லா பிரிவுகளிலும், விரிவான விளக்கங்களுடன் கூடிய விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, இலக்கணம், மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், கூடுதல் வினா விடைகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- மூன்று அலகு தேர்வு வினாத்தாள்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- முதல் பருவ பொது தொகுத்தறி – 2019, இரண்டாம் பருவ பொது தொகுத்தறி – 2019 மற்றும் சுராவின் மாதிரி மூன்றாம் பருவ பொதுத் தொகுத்தறித் தேர்வு வினாத்தாள் விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளன.

சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

**2021-22 புதிய பதிப்பு**

© வெளியீட்டாளர்கள்

ISBN : **978-81-8449-679-6**
குறியீட்டு எண் : FY-7-T

எழுதி வழங்கியவர்
**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது
பிரதான சாலை, அண்ணா நகர்,
சென்னை-600 040.
☎ 044-4862 9977, 044-486 27755
**e-mail** : enquiry@surabooks.com
**website :** www.surabooks.com

Our Guides for XI, XII Standard

- Sura's Tamil
- Sura's Smart English
- Sura's Mathematics (EM/TM )
- Sura's Physics (EM/TM)
- Sura's Chemistry (EM/TM)
- Sura's Biology (EM/TM)
- Sura's Computer Science (EM/TM)
- Sura's Commerce (EM/TM)
- Sura's Economics (EM/TM)
- Sura's Accountancy (EM/TM)
- Sura's Business Maths (EM)

Also available Sigaram Thoduvom mini guide (EM/TM) for all Subjects.

## பதிப்பாசிரியர் உரை...

**எங்கள் வாழ்த்திற்குரிய**
**இனிய மாணவ செல்வங்களே!**

உங்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் செல்லும் வழிகாட்டி **'சுராவின் தமிழ் உரைநூல்'** ஆகும். புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி உருவாக்கப்பட்டுள்ள **சுராவின் 7ஆம் வகுப்பு - தமிழ் உரைநூல் - முழு ஆண்டு பருவ** வழிகாட்டியை உங்களிடம் சேர்ப்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

புதிய தேர்வுத்திட்டத்தின்படி, 7ஆம் வகுப்பு தேர்வுகளில் நீங்கள் அதிக மதிப்பெண் பெற சரியான விடைகளுடன், எளிய முறையில் இந்த வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களின் கற்றுத்தரும் பணியில் உறுதுணையாகவும், மாணவர்கள் பாடங்களைக் கற்கும் விதத்தில் ஊக்கம் தரும் வகையிலும் நமது வழிகாட்டி திகழும் என நம்புகிறோம்.

இறையருளை வேண்டுகிறோம்.
நலமே விளைக!

- பதிப்பகத்தார்
**சுபாஷ் ராஜ்,** B.E., M.S.,
(சுரா பப்ளிகேஷன்ஸ்)

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 96001 75757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்



orders@surabooks.com    Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# முதல் பருவம்

## பொருளடக்கம்



| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| | மனப்பாடச் செய்யுள் | | | 1-4 |
| 1. | மொழி<br>அமுதத்தமிழ் | கவிதைப்பேழை | எங்கள் தமிழ் | 5-34 |
| | | | ஒன்றல்ல இரண்டல்ல | |
| | | உரைநடை உலகம் | பேச்சுமொழியும் எழுத்துமொழியும் | |
| | | விரிவானம் | சொலவடைகள் | |
| | | கற்கண்டு | குற்றியலுகரம், குற்றியலிகரம் | |
| | அலகு தேர்வு -1 | | | |
| 2. | இயற்கை<br>அணிநிழல் காடு | கவிதைப்பேழை | காடு | 35-64 |
| | | | அப்படியே நிற்கட்டும் அந்த மரம் | |
| | | உரைநடை உலகம் | விலங்குகள் உலகம் | |
| | | விரிவானம் | இந்திய வனமகன் | |
| | | கற்கண்டு | நால்வகைக் குறுக்கங்கள் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| | அலகு தேர்வு -2 | | | |
| 3. | நாடு, சமூகம்<br>நாடு அதை நாடு | கவிதைப்பேழை | புலி தங்கிய குகை | 65-96 |
| | | | பாஞ்சை வளம் | |
| | | உரைநடை உலகம் | தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர் | |
| | | விரிவானம் | கப்பலோட்டிய தமிழர் | |
| | | கற்கண்டு | வழக்கு | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| | அலகு தேர்வு -3 | | | |
| | முதல் பருவ தொகுத்தறி தேர்வு- 2019-2020 | | | |





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

## இரண்டாம் பருவம்

# பொருளடக்கம்



| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | அறிவியல், தொழில்நுட்பம் **அறிவியல் ஆக்கம்** | கவிதைப்பேழை | கலங்கரை விளக்கம் | 97-130 |
| | | | கவின்மிகு கப்பல் | |
| | | உரைநடை உலகம் | தமிழரின் கப்பற்கலை | |
| | | விரிவானம் | ஆழ்கடலின் அடியில் | |
| | | கற்கண்டு | இலக்கியவகைச் சொற்கள் | |
| அலகு தேர்வு -1 | | | | |
| 2. | கல்வி **ஓதுவது ஒழியேல்** | கவிதைப்பேழை | இன்பத்தமிழ்க் கல்வி | 131-154 |
| | | | அழியாச் செல்வம் | |
| | | உரைநடை உலகம் | வாழ்விக்கும் கல்வி | |
| | | விரிவானம் | பள்ளி மறுதிறப்பு | |
| | | கற்கண்டு | ஒரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம் | |
| அலகு தேர்வு -2 | | | | |
| 3. | கலை, அழகியல் **கலை வண்ணம்** | கவிதைப்பேழை | ஒரு வேண்டுகோள் | 155-190 |
| | | | கீரைப்பாத்தியும் குதிரையும் | |
| | | உரைநடை உலகம் | பேசும் ஓவியங்கள் | |
| | | விரிவானம் | தமிழ் ஒளிர் இடங்கள் | |
| | | கற்கண்டு | தொழிற்பெயர் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| அலகு தேர்வு -3 | | | | |
| இரண்டாம் பருவ தொகுத்தறி தேர்வு- 2019-2020 | | | | |





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

மூன்றாம் பருவம்

# பொருளடக்கம்



| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| 1. | நாகரிகம், தொழில், வணிகம் **நயத்தகு நாகரிகம்** | கவிதைப்பேழை | விருந்தோம்பல் | 191-222 |
| | | | வயலும் வாழ்வும் | |
| | | உரைநடை உலகம் | திக்கெல்லாம் புகழுறும் திருநெல்வேலி | |
| | | விரிவானம் | திருநெல்வேலிச் சீமையும் கவிகளும் | |
| | | கற்கண்டு | அணி இலக்கணம் | |
| அலகு தேர்வு -1 | | | | |
| 2. | அறம், தத்துவம், சிந்தனை **ஒப்புரவு ஒழுகு** | கவிதைப்பேழை | புதுமை விளக்கு | 223-252 |
| | | | அறம் என்னும் கதிர் | |
| | | உரைநடை உலகம் | ஒப்புரவு நெறி | |
| | | விரிவானம் | உண்மை ஒளி | |
| | | கற்கண்டு | அணி இலக்கணம் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| அலகு தேர்வு -2 | | | | |
| 3. | மனிதம், ஆளுமை **மானுடம் வெல்லும்** | கவிதைப்பேழை | மலைப்பொழிவு | 253-282 |
| | | | தன்னை அறிதல் | |
| | | உரைநடை உலகம் | கண்ணியமிகு தலைவர் | |
| | | விரிவானம் | பயணம் | |
| | | கற்கண்டு | ஆகுபெயர் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| அலகு தேர்வு -3 | | | | |
| சுராவின் மாதிரி வினாத்தாள் மூன்றாம் பருவ தொகுத்தறி தேர்வு | | | | |





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# TO ORDER WITH US

## SCHOOLS and TEACHERS:

We are grateful for your support and patronage to **'SURA PUBLICATIONS'**
Kindly prepare your order in your School letterhead and send it to us.
For Orders contact: 81242 01000 / 81243 01000

## DIRECT DEPOSIT

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **36550290536** | Our A/c No. | : **21000210001240** |
| Bank Name | : **STATE BANK OF INDIA** | Bank Name | : **UCO BANK** |
| Bank Branch | : PADI | Bank Branch | : Anna Nagar West |
| IFSC | : SBIN0005083 | IFSC | : UCBA0002100 |

| | | | |
|---|---|---|---|
| A/c Name | : **Sura Publications** | A/c Name | : **Sura Publications** |
| Our A/c No. | : **6502699356** | Our A/c No. | : **1154135000017684** |
| Bank Name | : **INDIAN BANK** | Bank Name | : **KVB BANK** |
| Bank Branch | : ASIAD COLONY | Bank Branch | : Anna Nagar |
| IFSC | : IDIB000A098 | IFSC | : KVBL0001154 |

After Deposit, please send challan and order to our address.
email : orders@surabooks.com / Whatsapp : 81242 01000.

## DEMAND DRAFT / CHEQUE

Please send Demand Draft / cheque in favour of **'SURA PUBLICATIONS'** payable at **Chennai**.

The Demand Draft / cheque should be sent with your order in School letterhead.

## STUDENTS :

Order via Money Order (M/O) to

**SURA PUBLICATIONS**
1620, 'J' Block, 16th Main Road, Anna Nagar,
Chennai - 600 040.
Phones : 044-4862 9977, 044-486 27755
Mobile : 96001 75757/ 81242 01000/81243 01000.
email : orders@surabooks.com Website : www.surabooks.com

www.surabooks.com



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

## மனப்பாடச் செய்யுள்

## முதல் பருவம்

இயல் - 1

### எங்கள் தமிழ்

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது.

கொல்லா விரதம் குறியாகக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்.

– நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

இயல் - 2

### காடு

பச்சை மயில்நடிக்கும்
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் – கிளியே
நரியெலாம் ஊளையிடும்.

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடி!

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
இயற்கை விடுதியிலே!

– சுரதா

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## திருக்குறள்

### புறங்கூறாமை

4. ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.

### வாய்மை

7. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.

9. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.

### இறைமாட்சி

10. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு.

– திருவள்ளுவர்

இயல் – 3

## புலி தங்கிய குகை

சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டு உளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுஉளன் ஆயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே.

– காவற்பெண்டு

# இரண்டாம் பருவம்

இயல் – 1

## கலங்கரை விளக்கம்

வானம் ஊன்றிய மதலை போல
ஏணி சாத்திய ஏற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்து
இரவில் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்
துறை....

– கடியலூர் உருத்திரங் கண்ணனார்

இயல் – 2

## அழியாச் செல்வம்

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட் செய்வன
விச்சைமற்று அல்ல பிற.

– சமண முனிவர்


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

## கீரைப்பாத்தியும் குதிரையும்

### (இரட்டுற மொழிதல்)

கட்டி அடிக்கையால் கால்மாறிப் பாய்கையால்
வெட்டி மறிக்கின்ற மேன்மையால் – முட்டப்போய்
மாறத் திரும்புகையால் வண்கீரைப் பாத்தியுடன்
ஏறப் பரியாகு மே.

– காளமேகப்புலவர்

## திருக்குறள்

### கல்வி

3. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு.

### தெரிந்து செயல்வகை

6. எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.

### இடுக்கண் அழியாமை

10. இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

– திருவள்ளுவர்

# மூன்றாம் பருவம்

இயல் – 1

## விருந்தோம்பல்

மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு – நீர்உலையுள்
பொன்திறந்து கொண்டு புகாவா நல்கினாள்
ஒன்றாகு முன்றிலோ இல்.

– முன்றுறை அரையனார்

இயல் – 2

## புதுமை விளக்கு

வையம் தகளியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் – செய்ய
சுடர்ஆழியான் அடிக்கே சூட்டினேன் சொல்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று.

– பொய்கை ஆழ்வார்



www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

## அறம் என்னும் கதிர்

இன்சொல் விளைநிலனா ஈதலே வித்தாக
வன்சொல் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈனஓர்
பைங்கூழ் சிறுகாலைச் செய். – முனைப்பாடியார்

## திருக்குறள்

### வினைசெயல் வகை

2. வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.

### நாடு

5. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு.

### பெருமை

9. பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்புஒவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். – திருவள்ளுவர்

## மலைப்பொழிவு

வாயும் வயிறும் ஆசையில் விழுந்தால்
வாழ்க்கை பாலைவனம் – அவர்
தூய மனத்தில் வாழ நினைத்தால்
எல்லாம் சோலைவனம்!

தமையும் வாட்டிப் பிறரையும் வாட்டும்
சண்டை சச்சரவு – தினம்
தன்னாடு என்றும் பிறர்நாடு என்றும்
பேசும் பொய்யுறவு!

இமைக்கும் போதில் ஆயிரம் போட்டி
எத்தனை வீண்கனவு – தினம்
இவை இல்லாது அமைதிகள் செய்தால்
இதயம் மலையளவு! – கண்ணதாசன்

☆ ☆ ☆




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# முதல் பருவம்

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# பொருளடக்கம்



| வ. எண் | பொருண்மை, இயல் | பாடத் தலைப்புகள் | | பக்க எண் |
|---|---|---|---|---|
| மனப்பாடச் செய்யுள் | | | | 1-4 |
| 1. | மொழி அமுதத்தமிழ் | கவிதைப்பேழை | எங்கள் தமிழ் | 7-34 |
| | | | ஒன்றல்ல இரண்டல்ல | |
| | | உரைநடை உலகம் | பேச்சுமொழியும் எழுத்துமொழியும் | |
| | | விரிவானம் | சொலவடைகள் | |
| | | கற்கண்டு | குற்றியலுகரம், குற்றியலிகரம் | |
| அலகு தேர்வு -1 | | | | |
| 2. | இயற்கை அணிநிழல் காடு | கவிதைப்பேழை | காடு | 35-64 |
| | | | அப்படியே நிற்கட்டும் அந்த மரம் | |
| | | உரைநடை உலகம் | விலங்குகள் உலகம் | |
| | | விரிவானம் | இந்திய வனமகன் | |
| | | கற்கண்டு | நால்வகைக் குறுக்கங்கள் | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| அலகு தேர்வு -2 | | | | |
| 3. | நாடு, சமூகம் நாடு அதை நாடு | கவிதைப்பேழை | புலி தங்கிய குகை | 65-96 |
| | | | பாஞ்சை வளம் | |
| | | உரைநடை உலகம் | தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர் | |
| | | விரிவானம் | கப்பலோட்டிய தமிழர் | |
| | | கற்கண்டு | வழக்கு | |
| | | வாழ்வியல் | திருக்குறள் | |
| அலகு தேர்வு -3 | | | | |
| முதல் பருவ தொகுத்தறி தேர்வு- 2019-2020 | | | | |




orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

இயல் 1

அமுதத்தமிழ்

# எங்கள் தமிழ்

கவிதைப்பேழை

## பாடல்

அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாக்
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்.

– நாமக்கல் வெ.இராமலிங்கனார்

## பாடலின் பொருள்

நம் தாய்மொழியாம் தமிழ் மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது. அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது. தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேச மாட்டார். தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்; அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும்; எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழி ஆகும்.

## நூல் வெளி



'எங்கள் தமிழ்' கவிதையைப் படைத்தவர் கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கனார்.

**பன்முகம் படைத்தவர்** : தமிழறிஞர், கவிஞர், விடுதலைப் போராட்ட வீரர், காந்தியக் கவிஞர்

**கொள்கை** : காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் காந்தியக் கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார்.

**முதல் அரசவைக் கவிஞர்** : இவர் தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர்.

**இவர் படைத்த நூல்கள்** : நாமக்கல் கவிஞர் பாடல்கள், மலைக்கள்ளன், என்கதை, சங்கொலி உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.

**நம் பாடப்பகுதி** : நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் நூலிலிருந்து இப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது.



www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## சொல்லும் பொருளும்

1. அருள் – கருணை
2. நெறி – வழி
3. விரதம் – நோன்பு
4. ஊக்கிவிடும் – ஊக்கப்படுத்தும்
5. குறி – குறிக்கோள்
6. பொழிகிற – தருகின்ற
7. வானொலி – வான்மொழி

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் .................... .**

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

**விடை:** அ) வழி

**2. 'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................... .**

அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும்
இ) குர + லாகும் ஈ) குர + ஆகும்

**விடை:** ஆ) குரல் + ஆகும்

**3. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................... .**

அ) வான் ஒலி ஆ) வானொலி இ) வாவொலி ஈ) வானெலி

**விடை:** ஆ) வானொலி

## நயம் அறிக

**1. 'எங்கள் தமிழ்' பாடலில் முதல் எழுத்து ஒன்றுபோல் வரும் மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.**

**மோனை:**

அருள்நெறி – அதுவே
பொருள் பெற – போற்றா
கொல்லா – கொள்கை

**2. 'எங்கள் தமிழ்' பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.**

**எதுகை :**

அருள் – பொருள்
கொல்லா – எல்லா
அன்பும் – இன்பம்


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



3. 'எங்கள் தமிழ்' பாடலில் இறுதி எழுத்து ஒன்றுபோல் வரும் இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

**இயைபு :**

தரலாகும் – குரலாகும்

புகழாது – இகழாது

குறியாக – நெறியாக

ஊக்கிவிடும் – போக்கிவிடும்

## குறுவினா

1. **தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?**

(i) தமிழ் மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.

(ii) அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

2. **தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.**

(i) தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.

(ii) தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார். இவையே கற்றவரின் இயல்புகளாகும் என நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் கூறுகிறார்.

## சிறுவினா

1. **'எங்கள் தமிழ்' பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**தமிழ்மொழியின் பண்புகள்:**

(i) தமிழ்மொழி, அருள்நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது.

(ii) அதுவே தமிழ் மக்களின் குரலாகவும் விளங்குகிறது.

**தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகள்:**

(i) தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்கள்.

(ii) தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்கள்.

**எல்லா மனிதர்களும் இன்புற்று வாழும் நெறிகள்:**

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ **அன்பும் அறமும்** உதவும்.

**தமிழ்மொழி தேன் போன்றது:**

(i) நம் தமிழ் மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும்.

(ii) அஃது அச்சத்தைப் போக்கி இன்பத்தைத் தரும்.

(iii) எங்கள் தமிழ்மொழி தேன் போன்ற மொழியாகும்.

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## சிந்தனை வினா

**1. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?**

(i) தமிழைப் போற்றிப் புகழாத கவிஞர்களே இல்லை எனலாம். நம் கவிஞர் ‘எங்கள் தமிழ்’ என்னும் கவிதையில் நம் தமிழ் மொழியானது அன்பையும் அறத்தையும் தூண்டக்கூடியது.

(ii) தேன் பல ஆண்டுகள் கெடாமல் இருப்பதை போலத் தமிழும் என்றும் கெடாமல் பாதுகாப்புடன் திகழ்கிறது.

(iii) தேன்சாப்பிடச் சாப்பிட உடல் வளம் பெருகும். தமிழ் கற்க கற்க உள்ளம் வளம் பெருகும். அதனால் கவிஞர் தமிழைத் தேனுடன் ஒப்பிடுகிறார்.

## கற்பவை கற்றபின்

**1. “எங்கள் தமிழ்” - பாடலை இசையுடன் பாடி மகிழ்க.**

இப்பாடலை இசையுடன் பாடிப் பழக வேண்டும்.

**2. பின்வரும் நாமக்கல் கவிஞர் பாடலைப் படித்துச் சுவைக்க.**

கத்தி யின்றி ரத்தமின்றி
    யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
    நம்பும் யாரும் சேருவீர்!... (கத்தியின்றி...)
கண்ட தில்லை கேட்ட தில்லை
    சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
    பலித்த தேநாம் பார்த்திட!... (கத்தியின்றி...)

இப்பாடல் விடுதலை வேட்கையைத் தூண்டுவதாக அமைந்துள்ளது. இவர் பாடலில் இயல்பாகவே சொல் நயம், பொருள் நயம், தொடைநயம் அமையப் பெற்ற ஓர் அற்புத பாடலாகும்.

**மோனை:** செய்யுளில் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனையாகும்.

கத்தியின்றி – கண்டதில்லை, பண்டு – பலித்த

**எதுகை :** செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகையாகும்.

கத்தியின்றி – யுத்தமொன்று,
கண்டதில்லை – சண்டையிந்த

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. குறி என்பதன் பொருள் .............. . **விடை: குறிக்கோள்**
2. விரதம் என்பதன் பொருள்............... **விடை: நோன்பு**

**விடையளி :**

1. **தமிழ்மொழியைக் கற்றோர் எதனை விரும்பமாட்டார்?**

   (i) தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார்.

   (ii) தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.

2. **எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ எவை உதவும்?**

   கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு எல்லா மனிதர்களும் இன்பமாக வாழ அன்பும் அறமும் பெரிதும் உதவும் என நாமக்கல் கவிஞர் தம் பாடல் மூலம் அறிவுறுத்துகிறார்.

3. **தமிழ்மொழி எதனைத் தூண்டும்?**

   நம் தாய்மொழியாம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும் என நாமக்கல் கவிஞர் தம் பாடல் மூலம் தெரியப்படுத்துகிறார்.

4. **தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் எனப் போற்றப்பட்டவர் யார்?**

   தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞர் எனப் போற்றப்பட்டவர் நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்.

5. **நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் காந்தியக் கவிஞர் என ஏன் அழைக்கப்பட்டார்?**

   நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார் காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு காந்தியத்தைப் பின்பற்றியதால் 'காந்தியக் கவிஞர்' என்று அழைக்கப்பட்டார்.

6. **நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் படைத்த நூல்களைக் குறிப்பிடுக.**

   மலைக்கள்ளன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், என் கதை, சங்கொலி முதலியன நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார் படைத்த நூல்கள்.

**பொருத்துக :**

| | | |
|---|---|---|
| 1. | ஊக்கிவிடும் | - அ) நோன்பு |
| 2. | பொழிகிற | - ஆ) ஊக்கப்படுத்தும் |
| 3. | குறி | - இ) தருகின்ற |
| 4. | விரதம் | - ஈ) குறிக்கோள் |

**விடை: 1-ஆ), 2- இ), 3-ஈ), 4-அ)**

☆ ☆ ☆

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





இயல் 1 அமுதத்தமிழ்

# ஒன்றல்ல இரண்டல்ல

கவிதைப்பேழை

## பாடல்

ஒன்றல்ல இரண்டல்ல தம்பி சொல்ல
ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)
தென்றல் தரும் இனிய தேன்மண மும்கமழும்
செங்கனியும் பொன்கதிரும் தந்துதவும் நன்செய்வளம்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)
பகைவென்ற திறம்பாடும் பரணிவகை – செழும்
பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத்தொகை – வான்
புகழ்கொண்ட குறளோடு அகம்புறமும் – செம்
பொருள்கொண்ட தமிழ்ச்சங்க இலக்கியப் பெருஞ்செல்வம்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)
முல்லைக்குத் தேர்கொடுத்தான் வேள்பாரி – வான்
முகிலினும் புகழ்படைத்த உபகாரி – கவிச்
சொல்லுக்குத் தலைகொடுத்தான் அருள்மீறி – இந்த
வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)
– உடுமலை நாராயணகவி

## பாடலின் பொருள்

தமிழ்நாட்டின் பெருமைகளைக் கூறினால் அவை ஒன்றிரண்டல்ல பலவாகும். அவை வேறு எவற்றோடும் இணைசொல்ல முடியாத விந்தைகளாகும். இங்கு வீசும் தென்றலில் தேன்மணம் கமழும். சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம். அத்தோடு இசைப்பாடலான பரிபாடலும் கலம்பக நூல்களும் எட்டுத்தொகையும் வான்புகழ் கொண்ட திருக்குறளும் அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்களும் எனத் தமிழின் இலக்கிய வளங்கள் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தை விடப்புகழ் பெற்றான் வள்ளல் வேள்பாரி. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல். இவர்கள் போல் புகழ் பெற்று வாழ்ந்த வள்ளல்களின் வரலாறு ஒன்றிரண்டல்ல பலவாகும்.

## நூல் வெளி



பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் உடுமலை நாராயணகவி. இவர் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியராகவும், நாடக எழுத்தாளராகவும் புகழ் பெற்றவர். தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர். நாட்டுப்புற இசையில் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர். இவரது பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## சொல்லும் பொருளும் :

1. ஒப்புமை – இணை
2. முகில் – மேகம்
3. அற்புதம் – வியப்பு
4. உபகாரி – வள்ளல்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம்.........**

அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி **விடை: இ) பரணி**

**2. வானில் ..................... கூட்டம் திரண்டால் மழை பொழியும்.**

அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில் **விடை: ஆ) முகில்**

**3. 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................... .**

அ) இரண்டு + டல்ல ஆ) இரண் + அல்ல
இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல **விடை: ஈ) இரண்டு + அல்ல**

**4. 'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ..................... .**

அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும்
இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும் **விடை: அ) தந்து + உதவும்**

**5. ஒப்புமை + இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்........... .**

அ) ஒப்புமைஇல்லாத ஆ) ஒப்பில்லாத
இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத **விடை: இ) ஒப்புமையில்லாத**

## குறுவினா

**1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?**

இங்கு வீசும் தென்றலில் தேன்மணம் கமழும். சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல பலவாகும் எனக் கவிஞர் கூறுகிறார்.

**2. 'ஒன்றல்ல இரண்டல்ல' - பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.**

முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தை விடப் புகழ் பெற்றான் வள்ளல் வேள்பாரி. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல். இவர்கள்போல் புகழ்பெற்று வாழ்ந்த வள்ளல்களின் வரலாறு பலவாகும்.

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## சிறுவினா

**1. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?**

பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம். இசைப்பாடலான பரிபாடல், கலம்பக நூல்கள், எட்டுத்தொகை, வான்புகழ் கொண்ட திருக்குறள். அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்கள் எனத் தமிழின் இலக்கிய வளங்கள் ஒன்றிரண்டல்ல பலவாகும்.

## சிந்தனை வினா

**1. தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?**

"அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே" என்பது தண்டியலங்கார நூற்பா கூறுகிறது. மனிதன் வாழ்க்கையில் அடைய வேண்டியவை அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் என்பது இதன் கருத்து. தமிழ்ச் சிந்தனைக்கும் இந்தியப் பொதுச் சிந்தனைக்கும் ஓர் அடிப்படை வேறுபாடு உண்டு. இந்தியப் பொதுச் சிந்தனை மரபின்படி அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நான்கும் அடைய வேண்டியவை. தமிழ்ச் சிந்தனை மரபில் தொல்காப்பியர் காலந்தொட்டே அறம், பொருள், இன்பம் என்ற கருத்து மட்டுமே உண்டு. வீடு பற்றிய கருத்து கிடையாது.

இந்திய மொழிகள் எல்லாவற்றையும் விட, தமிழில்தான் அறநூல்கள் அதிகமாக இருக்கின்றன. நம் தமிழில் சிறந்த அற இலக்கியமாக திகழ்வது திருக்குறள். நம்முடைய மானுடர்கள் ஒழுங்கீனமான செயல்களில் ஈடுபடும்போது அவற்றை திருத்திக் கொள்ள அறக்கருத்துகளையும் நீதிக் கருத்துகளையும் போதிக்கும் தேவை ஏற்படுகிறது. அதனால் தோன்றிய இலக்கியம்தான் அற இலக்கியமாகும்.

## கற்பவை கற்றபின்

**1. தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுக.**

அதியமான் நெடுமான் அஞ்சி(அதியமான்), வேள் ஆய் ஆண்டிரன் (ஆய்), வல்வில் ஓரி (ஓரி), மலையமான் திருமுடிக்காரி(காரி), கண்டீரக் கோப்பெருநள்ளி (நள்ளி), பாரி, வையாவிக் கோப்பெரும்பேகன்(பேகன்)

(i) **அதியமான் :** தகடூரை ஆண்ட சங்ககால மன்னர்களுள் ஒருவன். அதியர் என்போர் சங்ககாலக் குடிமக்கள். இவர்களின் தலைமகனாக விளங்கியவர்களை அதியர் கோமகன் என்றனர். கோமான் என்பது "கோமகன்" என்பதன் மரூஉ. அதியமான் என்பது 'அதியர் கோமான்' என்பதன் மரூஉ. அஞ்சி என்பது இவரது இயற்பெயர். இவருடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடு தலைநீர் நாடு எனப் பெயர் பெற்றிருந்தது. தலைநீர் என்பது ஒகேனக்கல் அருவியின் சங்ககாலப் பெயர் ஆகும். ஔவையாரின் நெருங்கிய நண்பர் ஆவார்.

(ii) **ஆய் :** பொதிகை மலைச் சாரலில் உள்ள ஆய்க்குடியைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த ஆயர்குல மன்னன் ஆவான்.

(iii) **ஓரி :** கடையெழு வள்ளல்களுள் ஒருவரான ஓரி சிறந்த வில்லாளி. கொல்லிமலைக்கும் அதைச் சார்ந்த நாட்டிற்கும் தலைவன். இவர் வல்வில் ஓரி எனவும் ஆதன் ஓரி எனவும் அழைக்கப்பட்டார்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**2. தமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.**

| | | |
|---|---|---|
| (i) இதிகாசம் | (ii) உரைநடை | (iii) உவமை |
| (iv) கட்டுரை | (v) கலந்துரையாடல் | (vi) கலை |
| (vii) கவிதை | (viii) காப்பியம் | (ix) சிறுகதை |
| (x) தொடர்கதை | (xi) சொலவடை | (xii) நாடகம் |
| (xiii) பழமொழி | (xiv) பாட்டு | (xv) புனிதம் |
| (xvi) விடுகதை | | |

## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் ............. **விடை: உடுமலை நாராயணகவி**
2. முகில் என்பதன் பொருள் ............. **விடை: மேகம்**
3. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தவர் ....... **விடை: குமண வள்ளல்**

**விடையளி :**

1. **முல்லைக்கு தேர் தந்தவர் யார்?**
முல்லைக்குத் தேர் தந்து மழைமேகத்தை விடப் புகழ் பெற்றவர் வள்ளல் வேள்பாரி.
2. **பரணி இலக்கியம் என்றால் என்ன?**
பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம்.

☆ ☆ ☆

# இயல் 1 அமுதத்தமிழ்
# பேச்சுமொழியும் எழுத்துமொழியும்
உரைநடை உலகம்

## மதிப்பீடு

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **மொழியின் முதல்நிலை பேசுதல், ...................... ஆகியனவாகும்.**
அ) படித்தல் ஆ) கேட்டல் இ) எழுதுதல் ஈ) வரைதல் **விடை: ஆ) கேட்டல்**
2. **ஒலியின் வரிவடிவம் ...................... ஆகும்.**
அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு **விடை: ஆ) எழுத்து**
3. **தமிழின் கிளைமொழிகளில் ஒன்று ...................... .**
அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம் **விடை: இ) தெலுங்கு**



www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





4. **பேச்சுமொழியை ...................... வழக்கு என்றும் கூறுவர்.**

அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி **விடை: ஆ) உலக**

## சரியா தவறா என எழுதுக

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது. **விடை:** சரி
2. எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது. **விடை:** சரி
3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி. **விடை:** தவறு
4. எழுத்து மொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம். **விடை:** தவறு
5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம். **விடை:** சரி

## ஊடகங்களை வகைப்படுத்துக

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்

| வ. எண் | எழுத்துமொழி | பேச்சுமொழி |
|---|---|---|
| (i) | செய்தித்தாள் | வானொலி |
| (ii) | நூல்கள் | தொலைக்காட்சி |
| (iii) | மின்னஞ்சல் | திரைப்படம் |

## குறுவினா

1. **மொழியின் இரு வடிவங்கள் யாவை?**

(i) ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சுமொழித் தேவைப்படுகிறது.
(ii) காலம் கடந்து வாழ்வதற்கு எழுத்துமொழித் தேவைப்படுகிறது.
(iii) எனவே பேச்சுமொழி, எழுத்துமொழி இவ்விரு வடிவங்களும் மொழியின் இரு கண்களாகும்.

2. **பேச்சுமொழி என்றால் என்ன?**

(i) வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும்.
(ii) மொழியின் உயிர் நாடியாக விளங்குவது பேச்சுமொழியே என்பர்.

3. **வட்டாரமொழி எனப்படுவது யாது?**

(i) பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும்.
(ii) மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும்.
(ii) இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





## சிறுவினா

1. **பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கினை விளக்குக.**

| வ. எண் | பேச்சுமொழி | எழுத்துமொழி |
|---|---|---|
| (i) | உலக வழக்கு என்பர். | இலக்கிய வழக்கு என்பர். |
| (ii) | சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும். | சொற்கள் முழுமையாக எழுதப்படும். |
| (iii) | உணர்ச்சிக் கூறுகள் அதிகம். | உணர்ச்சிக் கூறுகள் குறைவு. |
| (iv) | உடல் மொழியும் குரல் ஏற்றத்தாழ்வும் இணைவதால் அஃது எளிமையாக கருத்தை உணர்த்துகிறது. | உடல் மொழி, குரல் ஏற்றத் தாழ்வு போன்றவற்றிற்கு இடமில்லை. |

2. **கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?**

(i) ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

(ii) அவர்கள் வாழும் இடத்தின் நில அமைப்பு, இயற்கைத் தடைகள் போன்றவற்றின் காரணமாக பேசும் மொழியில் சிறிது சிறிது மாற்றங்கள் ஏற்படும்.

(iii) அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறையும் பொழுது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும். அவ்வாறு உருவாகும் புதிய மொழிகள் ‘கிளைமொழிகள்’ எனப்படும்.

(iv) கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் ஆகும்.

## சிந்தனை வினா

1. **இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் வாழ்வதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?**

இலக்கு + இயம் = இலக்கியம். இலக்கியங்கள் நம் வாழ்வை வளப்படுத்த, வழிகாட்டக்கூடிய ஒளிவிளக்குகளாகத் திகழ்கின்றன. இலக்கியங்கள் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டுகின்றன. அற இலக்கியங்கள் வழங்கும் அற்புதமான கருத்துகளைக் கடைப்பிடித்தால் நம் வாழ்வு பிறரால் பாராட்டப்படும் தன்மையுடையதாக விளங்கும்.

இலக்கியங்கள் வழங்குகின்ற கருத்துகள் எக்காலமும் நிலைத்து நிற்கின்ற கருவூலமாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு இலக்கியமும் ஒவ்வொரு உண்மையை பறைசாற்றுகின்றன.

மணிமேகலை பசிப்பிணி அகற்றும் மாண்பை எடுத்துரைக்கிறது. சிலப்பதிகாரம் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும், உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்ற உண்மைகளை உலகிற்கு எடுத்துரைக்கிறது. இவ்வாறு ஒவ்வொரு இலக்கியமும் தரும் உண்மையான கருத்துகளைக் கடைப்பிடித்து நாம் வாழ்வின் உன்னத நிலையை அடைவோம்.



www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற நிலை கடந்து அறிவியல் தமிழ், கணினி தமிழ், இணையத் தமிழ், ஊடகத் தமிழ் என்று மொழி வளர்ந்து கொண்டே வருகிறது. இத்தகு வளர்ச்சி தமிழ்மொழியின் உச்சநிலை வளர்ச்சியை நோக்கிச் செல்கிறது என்பதைக் காட்டுகிறது. பலநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் எழுத்து வடிவில் இருப்பதால்தான் நம்மால் இன்றும் படிக்க முடிகிறது.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சுவழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்துவழக்குத் தொடர்களை எழுதி வருக.**

**பேச்சுமொழி** : அம்மா பசிக்குது எனக்குச் சோறு வேணும்.
**எழுத்துமொழி** : அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.
**பேச்சுமொழி** : நல்லாச் சாப்ட்டான்.
**எழுத்துமொழி** : நன்றாகச் சாப்பிட்டான்.
**பேச்சுமொழி** : நல்லா படிச்சான்.
**எழுத்துமொழி** : நன்றாகப் படித்தான்.
**பேச்சுமொழி** : சந்தியா சாப்ட்டியா.
**எழுத்துமொழி** : சந்தியா சாப்பிட்டாயா.
**பேச்சுமொழி** : வீட்டுப் பாடம் எழுதிட்டியா.
**எழுத்துமொழி** : வீட்டுப்பாடம் எழுதிவிட்டாயா.

**2. பேசும் போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களையும் எழுதுக.**

(i) சொல்லு – சொல்
(ii) வில்லு – வில்
(iii) நில்லு – நில்
(iv) வந்தியா – வந்தாயா?
(v) எழுந்தியா – எழுந்தாயா?
(vi) சாப்ட்டியா – சாப்பிட்டாயா?

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1. வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது .................... மொழியாகும்.**

அ) பேச்சுமொழி ஆ) எழுத்துமொழி
இ) இரட்டை வழக்கு மொழி ஈ) இவை ஏதும் இல்லை

[விடை: ஆ) எழுத்துமொழி]


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





**2. சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால் பொருள் வேறுபடும் என்பதை உணர்த்தும் இலக்கண நூல் ........................**

அ) நன்னூல் ஆ) தண்டியலங்காரம்

இ) புறப்பொருள் வெண்பா ஈ) தொல்காப்பியம் **விடை: அ) நன்னூல்**

**3. பேச்சுமொழியில் உணர்ச்சிக் கூறுகள்..................**

அ) அதிகமாக இருக்கும் ஆ) குறைவாக இருக்கும்

இ) அளவாக இருக்கும் ஈ) இவை ஏதும் இல்லை

**விடை: அ) அதிகமாக இருக்கும்**

**நிரப்புக :**

1. பேச்சுமொழியின் சிறப்புக் கூறுகள் .............

**விடை: உடல்மொழி, ஒலிப்பதில் ஏற்ற இறக்கம்**

2. பேசப்படும் சூழலைப் பொருத்துப் பேச்சுமொழியின் பொருள் ..............

**விடை: வேறுபடும்**

3. பேச்சுமொழி இடத்திற்கு இடம் ........... **விடை: மாறுபடும்**

4. சூழலுக்கு ஏற்றவாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை ......... என்பர். **விடை: வட்டார மொழி**

5. கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலியவை ......... மொழிகளாகும். **விடை: கிளை**

**விடையளி :**

**1. இரட்டை வழக்குமொழி என்றால் என்ன?**

தமிழில் பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், தமிழை இரட்டை வழக்கு மொழி என்பர்.

**2. இரட்டை வழக்கு மொழியை தொல்காப்பியர் எவ்வாறு குறிப்பிடுகிறார்?**

இரட்டை வழக்கு மொழியை தொல்காப்பியர் உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்று குறிப்பிடுகிறார்.

**3. மொழியின் முதல் நிலை எவை?**

பேசுவதும் கேட்பதும் மொழியின் முதல் நிலை ஆகும்.

**4. இரண்டாம் நிலை என்று மொழியில் எதனை குறிப்பிடுகின்றோம்?**

படித்தல், எழுதுதல் என்பவை மொழியின் இரண்டாம் நிலை எனக் குறிப்பிடுகின்றோம்.

**5. மொழி இல்லையேல் மனித சமுதாயம் முன்னேற்றம் அடைந்திருக்காது இக்கூற்றை மெய்ப்பிக்க.**

(i) மொழியின் மூலமாக மனிதர்களின் சிந்தனை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படுகிறது.

(ii) மொழி இல்லையேல் மனித சமுதாயம் இன்று அடைந்திருக்கும் முன்னேற்றத்தை எட்டியிருக்க முடியாது என்பது முற்றிலும் உண்மையே.



www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


**6. மொழிகள் பல தோன்றக் காரணங்கள் யாவை?**

(i) ஆரம்ப காலத்தில் மனிதர்கள் தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்து வந்தனர்.

(ii) அவர்கள் தங்களுக்குள் தனித்தனியான ஒலிக்குறியீடுகளை உருவாக்கிக் கொண்டனர்.

(iii) இதன் விளைவாகவே மொழிகள் பல தோன்றின.

**7. மொழியைப் பற்றி மு. வரதராசனார் கூறுவன யாவை?**

(i) 'பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவையே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு.

(ii) எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும் என மு. வரதராசனார் மொழியைப் பற்றி கூறுகிறார்.

**8. மனிதர்களின் சிந்தனைகள் காலம் கடந்து வாழ்வதற்கு காரணமாக இருப்பது ஏன்?**

(i) மனிதர்களின் சிந்தனைகள் காலம் கடந்து வாழ்வதற்கு காரணமாக இருப்பது எழுத்து மொழியே.

(ii) நேரில் காண இயலாத நிலையில் செய்தியைத் தெரிவிக்க எழுத்துமொழி உதவுகிறது.

**9. மொழியின் உயிர்நாடியாக விளங்குவது எது? ஏன்?**

(i) மொழியின் உயிர்நாடியாக விளங்குவது பேச்சுமொழியே.

(ii) பேச்சுமொழி உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்தும்.

(iii) அது கருத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.

(iv) பேசுபவரின் உடல்மொழியும் ஒலிப்பதில் ஏற்ற இறக்கம் ஆகியவையும் பேச்சுமொழியின் சிறப்புக்கூறுகள் ஆகும்.

**10. வட்டார மொழிக்குச் சான்று தருக.**

(i) பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும்.

(ii) மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும்.

(iii) இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர்.

**எடுத்துக்காட்டு :**

'இருக்கிறது' என்னும் சொல் 'இருக்கு', 'இருக்குது' 'கீது' என்று தமிழகத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையாகப் பேசப்படுகிறது.

☆ ☆ ☆


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





இயல் 1

அமுதத்தமிழ்

# சொலவடைகள்

(பொம்மலாட்டம்)

விரிவானம்

## மதிப்பீடு

**1. பாடப்பகுதி பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.**

**ஆளுக்கு ஒரு வேலை (பொம்மலாட்டம்)**

**(சிறுகதை)**

பொம்மலாட்டம் ஒரு கலை, கதை ஒன்றைத் தேர்ந்தெடுத்து பின்னணியில் கதை மாந்தர்களை பேச விட்டு கதை சொல்லத் தொடங்குவர். கதை விறுவிறுப்பாக சென்று ஒரு கட்டத்தில் சட்டென்று முடியும். இக்காட்சியைப் பார்த்து சிறுவர் முதல் பெரியவர் வரை பார்த்து மகிழ்வர். இதோ மெல்லிய ஒடிசலான தேகம் கொண்ட நடுத்தர வயதுக்காரர் பொம்மலாட்டம் மூலம் கதையொன்றை சொல்லி அசத்துகிறார். அந்தக் கதையை நாமும் கேட்போமே!

பொம்மலாட்டம் பார்க்க வந்தவர்களை இரு கரம் கூப்பி வணங்கி கதை நாயகனை அறிமுகம் செய்கிறார் கதை சொல்லி.

பள்ளிக்கூடம் போகாமலே பாடங்களை படிக்காமலே ஊரைச் சுற்றுகிறான் பையன். அவங்க அம்மா எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கல.

“அணை உடைஞ்சு போன வெள்ளம் அழுதாலும் வராது. இப்ப நீ சரியா படிக்கலன்னா வாழ்க்கையிலே முன்னேற முடியாது. ஒழுங்காப் பள்ளிக்கூடம் போயி படிக்கிற வேலையைப் பாரு” என்கிறார் அப்பா. “படிக்கிறதெல்லாம் எனக்குப் பிடிக்காது” முகத்தில் அறைந்தாற் போல் பேசுகிறான் நம் கதைநாயகன். அப்பா சத்தம் போடுகிறார், சத்தம் கேட்டு அம்மா வெளியே வராங்க, “ராசா, உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ளே விலைபோகும். நீ படிக்கலன்னா ஊர்ல யாரும் மதிக்கமாட்டங்க. அதனால நீ பள்ளிக்கூடம் போயி நல்லாப் படிச்சுக்க” – இது அம்மாவின் உபதேசம்.

வேறு வழியில்லாம பையன் பள்ளிக்கூடம் போகிறான். அவனுக்கு படிப்பதில் நாட்டமில்லை, விளையாட யாராவது கிடைப்பாங்களான்னு பார்க்குறான். அங்கே எறும்பு ஒன்னு போய்கிட்டு இருக்கு, “எறும்பே! எறும்பே! என் கூட விளையாட வர்றியா?” – என்றான் பையன். “குடல் கூழுக்கு அழுவுதாம் கொண்டை பூவுக்கு அழுவுதாம் எனக்கு நெறைய வேலை கிடக்கு. நான் கிளம்புறேன்.” நீ அதோ பறக்குதே அந்தத் தேனீகூடப் போய் விளையாடு.

“தேனீ ! தேனீ ! நீ என் கூட விளையாட வர்றியா? என்றான் பையன்” “உனக்குத்தான் வேலை இல்லை, எனக்குமா வேலை இல்லை. போபோ நான் தேன் எடுக்கனும்” பறந்து போனது தேனீ. பையன் கொஞ்சம் தூரம் நடக்கிறான். பொதிமாடு ஒன்றைப் பார்க்கிறான்.

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



"மாடே! மாடே! சும்மாதானே இருக்கே! என் கூட விளையாட வர்றியா?" என்றான் பையன்.

"எனக்கு வேலை இருக்கு அந்த ஆமையை போய்பாரு என்றது பொதிமாடு". "ஆமையே! ஆமையே! என் கூட விளையாட வர்றியா?" எனக் கேட்டான் பையன்.

"முயலோட போட்டி வச்சிருக்கேன். எனக்கு உன்கூட விளையாட நேரமில்லே நீ அந்த முயலைப் போய் பாரு" என்றது ஆமை.

முயலை விளையாட அழைத்தான். முயலும் விளையாட மறுத்தது.

கடைசியில் குட்டிச்சுவரில் எகிறி குதித்தான் பையன். குட்டிச் சுவரில் இருந்து எறும்பு, பூச்சி எல்லாம் கோபத்தோடு அவன் கையில் கால்ல ஏறி நறுக்கு நறுக்கென்று கடித்தன. அள்ளுறவன் பக்கத்துல இருந்தாலும் கிள்ளுறவன் பக்கத்துல இருக்கக் கூடாதுன்னு அந்தப் பையன் வலிபொறுக்க முடியாமல் கத்திக் கொண்டே ஓடுறான்.

அம்மாவைப் பார்த்து "இந்த உலகத்திலே எல்லாரும் அவங்க அவங்க வேலையைப் பாக்குறாங்க ஈ, எறும்பு கூடச் சும்மா இல்லாம வேலை செய்யுதுக. எனக்கு இப்பத்தான் புத்தி வந்தது" என்றான் பையன்.

அம்மா ஆனந்தக் கண்ணீர் சிந்தினாள் மகனின் மன மாற்றத்திற்காக.

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகளைத் தொகுத்து வருக.**

(i) வெளைச்சலுக்கும் வெள்ளாட்டுக்கும் ஜென்மப் பகைங்கிற மாதிரி படிக்காத பையனை போராடித்தான் படிக்க வைக்கணும்.

(ii) அடை மழைவிட்டாலும் செடி மழை விடாதுங்கிற மாதிரி படிக்கலனா அப்பாவிட்டாலும் அம்மா விட மாட்டாங்க.

(iii) கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை?

(iv) "அப்பன் குதிருக்குள்ள இல்ல."

**2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சொலவடைகளில் எவையேனும் ஐந்தனைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.**

(i) குத்துக்கல்லுக்குக் குளிரா வெயிலா என்பது போல் என் நண்பன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்தான்.

(ii) தட்டிப்போட்ட ரொட்டிக்குப் புரட்டிப் போட ஆளு இல்லே என்பது போல வறுமையிலே வாடுகிறவங்களுக்கு கை கொடுக்க ஆள் இல்லாமல் திண்டாடுவாங்க.

(iii) அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்னு சொல்லுற மாதிரி நிழலில் படுத்து தூங்கினதால ஆமையிடம் தோற்று போச்சாம் முயலு!

(iv) ஆயிரம்கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும் உழைக்கிறவன் மத்தியிலே உதவாக்கரை ஒருத்தன் இருந்தால் அந்தக் கூட்டமே கெட்டுவிடும்.

(v) புண்ணுக்கு மருந்து போட முடியும் புடிவாதத்துக்கு மருந்து போட முடியுமா? வீண் விதண்டாவாதம் செய்கிறவனிடம் பேசி ஜெயிக்க முடியாது.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





## கூடுதல் வினாக்கள்

**நிரப்புக :**

1. உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ள ......... போகும். விடை: **விலை**
2. அடைமழை விட்டாலும் ............ மழை விடாது. விடை: **செடி**
3. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு ............. பூச்சி போதும். விடை: **அந்துப்பூச்சி**
4. பாடிப்பாடிக் குத்தினாலும் ............... அரிசி ஆகுமா? விடை: **பதரு**
5. அதிரஅடிச்சா ........... விளையும். விடை: **உதிர**

☆ ☆ ☆

இயல் 1 அமுதத்தமிழ்

# குற்றியலுகரம், குற்றியலிகரம்

கற்கண்டு

## மதிப்பீடு

**கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து.

| நெடில் தொடர் | ஆய்தத் தொடர் | உயிர்த் தொடர் | வன்தொடர் | மென் தொடர் | இடைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஆறு<br>காசு<br>ஏடு | எஃகு | விறகு | உழக்கு<br>எட்டு | பந்து<br>கரும்பு | கொய்து |

### பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக

1. பசு, விடு, ஆறு, கரு – <u>**கரு**</u>
2. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து – <u>**பஞ்சு**</u>
3. ஆறு, மாசு, பாகு, அது – <u>**அது**</u>
4. அரசு, எய்து, மூழ்கு, மார்பு – <u>**அரசு**</u>
5. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு – <u>**எஃகு**</u>

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





## குறுவினா

**1. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.**

குறுமை + இயல் + உகரம் – குற்றியலுகரம். வல்லின எழுத்துக்கள் ஆறின் மீதும் ஏறி (சேர்ந்து) வரும் உகரம் தனக்கு உரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும். இதற்குக் குற்றியலுகரம் என்று பெயர்.

**எடுத்துக்காட்டு:** காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு.

**2. குற்றியலிகரம் என்றால் என்ன?**

(i) குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்.

(ii) வரகு + யாது = வரகியாது.

(iii) குற்றியலுகரச் சொற்களின் முன் யாது என்னும் சொல் வருமொழியாக வந்து சேரும் போது, நிலைமொழியீற்று 'உ' கரம் இகரமாகத் திரிந்து தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து குறைந்து அரை மாத்திரை அளவில் ஒலிக்கும். இது 'குற்றியலிகரம்' எனப்படும்.

## கற்பவை கற்றபின்

**1. ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப் பெயர்களைப் பட்டியலிட்டு எழுதுங்கள்; அவற்றில் குற்றியலுகரச் சொற்களை எடுத்து எழுதுங்கள்.**

| | |
|---|---|
| 1. ஒன்று | 2. இரண்டு |
| 3. மூன்று | 4. நான்கு |
| 5. ஐந்து | 6. ஆறு |
| 7. ஏழு | 8. எட்டு |
| 9. ஒன்பது | 10. பத்து |

**குற்றியலுகரச் சொற்கள் :**

1. ஒன்று – மென்தொடர்க் குற்றியலுகரம்
2. இரண்டு – மென்தொடர்க் குற்றியலுகரம்
3. மூன்று – மென்தொடர்க் குற்றியலுகரம்
4. நான்கு – மென்தொடர்க் குற்றியலுகரம்
5. ஐந்து – மென்தொடர்க் குற்றியலுகரம்
6. ஆறு – நெடில்தொடர்க் குற்றியலுகரம்
7. எட்டு – வன்தொடர்க் குற்றியலுகரம்
8. ஒன்பது – உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
9. பத்து – வன்தொடர்க் குற்றியலுகரம்


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**2. குற்றியலுகர எண்ணும் பெயர்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.**

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து

1. நெடில் தொடர்க் குற்றியலுகரம் – ஆறு
2. உயிர் தொடர்க் குற்றியலுகம் – ஒன்பது
3. வன்தொடர்க் குற்றியலுகரம் – எட்டு, பத்து
5. மென்தொடர்க் குற்றியலுகரம் – ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து

**3. குற்றியலுகர எண்ணும் பெயர்களின் மாத்திரை அளவைக் கண்டுபிடியுங்கள்.**

1. ஒன்று – 1 + ½ + ½ = 2
2. இரண்டு – 1 + 1 + ½ + ½ = 3
3. மூன்று – 2 + ½ + ½ = 3
4. நான்கு – 2 + ½ + ½ = 3
5. ஐந்து – 2 + ½ + ½ = 3
6. ஆறு – 2 + ½ = 2½
7. எட்டு – 2 + ½ + ½ = 3
8. ஒன்பது – 1 + ½ + 1 + ½ = 3
9. பத்து – 1 + ½ + ½ = 2

**4. கு, சு, டு, து, று ஆகிய குற்றியலுகரத்திதை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்களைத் திரட்டுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| பாகு | காசு | பாட்டு | பந்து | பயறு |
| பாக்கு | மாசு | பாடு | காது | பற்று |
| ஆகு | தூசு | மாடு | மாது | மாறு |

## கூடுதல் வினாக்கள்

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

**1. குறில் எழுத்துகளைக் குறிக்க ............. என்ற அசைச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.**

அ) கரம் ஆ) கான் இ) கேனம் ஈ) கோடை

**விடை: அ) கரம்**

**2. நெடில் எழுத்துகளைக் குறிக்க ........... என்ற அசைச் சொல்லைப் பயன்படுத்துகிறோம்.**

அ) கேனம் ஆ) கரம் இ) கான் ஈ) கோடை

**விடை: இ) கான்**

**3. குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ............... வகையாகப் பிரிக்கப்படும்.**

அ) 3 ஆ) 5 இ) 6 ஈ) 1

**விடை: இ) 6**

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


4. **தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ..............**

அ) நெடில் தொடர்க் குற்றியலுகரம் ஆ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

இ) இடைத்தொடர் குற்றியலுகரம் ஈ) மென்தொடர்க் குற்றியலுகரம்

விடை: **அ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்**

5. **ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும் குற்றியலுகரம் எது?**

அ) மென்தொடர்க் குற்றியலுகரம் ஆ) நெடில்தொடர்க் குற்றியலுகரம்

இ) இடைத்தொடர் குற்றியலுகரம் ஈ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

விடை: **ஆ) நெடில் தொடர்க் குற்றியலுகரம்**

6. **தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ...............**

அ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ஆ) வன்தொடர்க் குற்றியலுகரம்

இ) நெடில்தொடர்க் குற்றியலுகரம் ஈ) இடைத்தொடர் குற்றியலுகரம்

விடை: **அ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**

7. **தன் ஒரு மாத்திரை அளவில் இருந்து குறுகி ஒலிக்கும் இகரம் ............... எனப்படும்.**

அ) குற்றியலுகரம் ஆ) குற்றியலிகரம்

இ) முற்றியலுகரம் ஈ) ஐகாரக்குறுக்கம் விடை: **ஆ) குற்றியலிகரம்**

8. **குற்றியலிகரம் ............... இடங்களில் மட்டும் வரும்.**

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) ஆறு விடை: **அ) இரண்டு**

9. **'மியா' என்பது ஓர் அசைச்சொல். இச்சொல்லில் வரும் 'மி'யில் உள்ள இகரம் ...............**

அ) குற்றியலிகரம் ஆ) குற்றியலுகரம்

இ) முற்றியலுகரம் ஈ) மகரக்குறுக்கம் விடை: **அ) குற்றியலிகரம்**

**நிரப்புக :**

1. சால்பு – இது ............. ஆகும். விடை: **இடைத்தொடர்க் குற்றியலுகரம்**
2. கயிறு – இது .............. ஆகும். விடை: **உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்**
3. .... என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை. விடை: **வ்**

**பொருத்துக :**

| | | | |
|---|---|---|---|
| 1. | பாடு | – | அ) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் |
| 2. | அஃது | – | ஆ) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் |
| 3. | வரலாறு | – | இ) வன்தொடர்க் குற்றியலுகரம் |
| 4. | பாட்டு | – | ஈ) நெடில்தொடர்க் குற்றியலுகரம் |
| 5. | மாசு | – | உ) வன்தொடர்க் குற்றியலுகரம் |
| 6. | மஞ்சு | – | ஊ) இடைத்தொடர்க் குற்றியலுகரம் |
| 7. | மூழ்கு | – | எ) நெடில்தொடர்க் குற்றியலுகரம் |
| 8. | பத்து | – | ஏ) மென்தொடர்க் குற்றியலுகரம் |

விடை: **1-ஈ), 2- அ), 3-ஆ), 4-இ), 5 - எ), 6 -ஏ), 7- ஊ), 8 - உ)**


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





**விடையளி :**

**1. முதல் எழுத்து என்றால் என்ன?**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டும், மெய் எழுத்துகள் பதினெட்டும் ஆக முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் எனப்படும்.

**2. சார்பெழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

சார்பெழுத்து பத்து வகைப்படும்.

அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்பனவாகும்.

**3. முற்றியலுகரம் என்றால் என்ன?**

(i) தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும்.

(ii) வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும்.

(iii) இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.

**எடுத்துக்காட்டு:** புகு, பசு, விடு, அது, வறு

**4. குற்றியலுகரத்தின் வகைகளைப் பற்றி கூறுக.**

குற்றியலுகரம் ஆறு வகைப்படும். அவை,

(i) நெடில்தொடர்க் குற்றியலுகரம்

(ii) ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

(iii) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

(iv) வன்தொடர்க் குற்றியலுகரம்

(v) மென்தொடர்க் குற்றியலுகரம்

(vi) இடைத்தொடர்க் குற்றியலுகரம்

**5. நெடில்தொடர்க் குற்றியலுகரம் சான்றுடன் விளக்குக.**

(i) தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'நெடில்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(ii) இவை ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும்.

**எடுத்துக்காட்டு:** பாகு, மாசு, பாடு, காது

**6. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் சான்றுடன் விளக்குக.**

ஆய்தத் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:** எஃகு, அஃது.

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**7. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் சான்றுடன் விளக்குக.**

தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:**

அரசு (ர – ர் + அ), கயிறு (யி – ய்+இ), ஒன்பது (ப – ப்+அ), வரலாறு (லா – ல் + ஆ)

**8. வன்தொடர்க் குற்றியலுகரம் சான்றுடன் விளக்குக.**

வல்லின (க், ச், ட், த், ப், ற்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன் தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:** பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று

**9. மென்தொடர்க் குற்றியலுகரம் சான்றுடன் விளக்குக.**

மெல்லின (ங், ஞ், ண், ந், ம், ன்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:** பங்கு, மஞ்சு, பண்பு, பந்து, அம்பு, கன்று.

**10. இடைத்தொடர்க் குற்றியலுகரம் சான்றுடன் விளக்குக.**

இடையின (ய், ர், ல், வ், ழ், ள்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் எனப்படும்.

**எடுத்துக்காட்டு:** எய்து, மார்பு, சால்பு, மூழ்கு.

**11. தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்குமா?**

தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும்.

**12. ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பது எது?**

ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பது முற்றியலுகரம்.

**எடுத்துக்காட்டு :** புகு, பசு, விடு, அது, வறு.

## மொழியை ஆள்வோம்

**கேட்க :**

**1. தமிழின் சிறப்பைப் பற்றிய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்க.**

**உயர்திரு. ச.பாலன் அவர்களின் சொற்பொழிவு:**

(i) மிக மிக உயர்ந்த மொழி தமிழ்மொழி.

(ii) பேரறிஞர்கள் பலர் தங்கள் நூல்கள் வாயிலாக தமிழ்மொழியின் சிறப்பை விரிவாக எடுத்துரைத்துள்ளனர்.

(iii) "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் மகாகவி பாரதியார்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





(iv) "கம்பனை போல் வள்ளுவரைப் போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்ஙனுமே பிறந்தது இல்லை" என்றார் பாரதியார்.

(v) பெருமை மிக்க நூல்களும் அறிஞர்களும் சிறப்பித்து பாடிய தமிழ் உலக அளவிலே மிகச் சிறந்த ஒரு மொழியாகப் போற்றப்படுகின்றது.

(vi) செம்மொழி என்றால் பிறமொழிகளின் தாக்கம் இல்லாமலும் சில மொழிகளுக்கு தாயாகவும் இலக்கண இலக்கிய வளமுடையதாகவும் இருக்க வேண்டும்.

(vii) கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகியவற்றிற்கு தாய்மொழியாக இருக்கிறது நம் தமிழ்மொழி.

(viii) தமிழின் பெருமையை விளக்கும் வண்ணம் அறிஞர்கள் பலர் நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்கள்.

**கவிக்கோ அப்துல்ரகுமானின் உரை :**

(i) தமிழ்மொழி பேசுவதற்கு அதிகம் மூச்சு விடவேண்டியது இல்லை.

(ii) தமிழ் உலகத்திலேயே உயர்ந்தமொழி.

(iii) ஆதி மொழி தொன்மை மொழி தமிழ் மொழியாகும்.

(iv) இரண்டு நாடுகளின் அரசாங்கமொழி ஸ்ரீலங்கா, சிங்கப்பூர்.

(v) மலேசியாவில் ஒரே கல்விமொழி.

(vi) செம்மொழிகளில் முழுமையான இலக்கண வடிவம் கொண்டது தமிழ்மொழி தொல்காப்பியம்.

## கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக

### 1. நான் அறிந்த பழமொழிகள்

வணக்கம்! அன்னைத் தமிழில் வணங்குகிறேன்! நான் அறிந்த பழமொழிகளைப் பற்றி இங்கு பேச வந்துள்ளேன்.

**1. முயற்சி திருவினையாக்கும் :**

**பழமொழி விளக்கம் :** முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து எந்தவொரு செயலையும் செய்து வந்தால் வாழ்வில் உயர்வு அடையலாம் என்பதே இப்பழமொழியின் விளக்கம். 'சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்' என்பதை உணர்ந்து தொடர்ந்து முயற்சி செய்தால் வாழ்வில் வெற்றி பெறலாம் என்பதே இப்பழமொழி உணர்த்தும் நீதி.

**2. இளமையில் கல் :**

**பழமொழி விளக்கம் :** மனித வாழ்வில் கல்வி இன்றியமையாதது. ஆனால் கற்க வேண்டிய இளம் வயதில் கல்வி கற்க வேண்டும். இளமையில் மட்டுமே கல்வியை கற்க முடியும், கற்க வேண்டும் என்பது இப்பழமொழியின் நீதியாகும்.

**3. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் :**

**பழமொழி விளக்கம் :** வாழ்க்கையில் வெற்றி பெற நினைப்பவர்கள் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்கும்போது அந்த சந்தர்ப்பதை தவறவிடாமல் பயன்படுத்தி வெற்றி பெற வேண்டும்.

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



4. **உப்பிட்டவரை உள்ளளவும் நினை :**

**பழமொழி விளக்கம் :** நாம் பசியால் வாடிய பொழுது நமக்கு உணவளித்தவரை என்றுமே மறக்கக்கூடாது. நம்முடைய உள்ளத்தில் என்றுமே அவர்களை நினைக்க வேண்டும்.

5. **கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு :**

**பழமொழி விளக்கம் :** எனக்கு எல்லாம் தெரியும் என்று செருக்கு கொள்ளக்கூடாது. ஏனெனில் நாம் கற்றுக் கொண்டது நமது கையினைப் போன்ற சிறிய அளவே. கல்லாதது உலகளவு உள்ளது என்பதே இப்பழமொழியின் விளக்கம். எல்லாம் தெரியும் என்ற செருக்கு ஒருவனுக்கு இருக்கக்கூடாது என்பதை உணர்த்துவதே இப்பழமொழியின் நீதியாகும்.

## சொற்களை எடுத்து எழுதுக

**கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு ஏற்பத் தொடரில் அழுத்தம் தர வேண்டிய சொற்களை எடுத்து எழுதுக.**

**கோதை கவிதையைப் படித்தாள்.**

| வினா | அழுத்தம் தரவேண்டிய சொல் |
|---|---|
| **கோதை எதைப் படித்தாள்?** | எதைப் |
| **கவிதையைப் படித்தது யார்?** | யார் |
| **கோதை கவிதையை என்ன செய்தாள்?** | என்ன |

## அறிந்து பயன்படுத்துவோம்

திணை இரண்டு வகைப்படும். அவை, 1. உயர்திணை, 2. அஃறிணை
ஆறு அறிவுடைய மனிதர்களை **உயர்திணை** என்பர்.
பறவைகள், விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் உயிரற்ற பொருள்களை **அஃறிணை** என்பர்.

## படத்திற்குப் பொருத்தமான திணையை எழுதுக


**உயர்திணை**


**அஃறிணை**


**உயர்திணை**


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## கீழ்க்காணும் சொற்களை உயர்திணை, அஃறிணை என வகைப்படுத்துக

**வயல், முகிலன், குதிரை, கயல்விழி, தலைவி, கடல், ஆசிரியர், புத்தகம், சுரதா, மரம்**

| உயர்திணை | அஃறிணை |
|---|---|
| சுரதா, முகிலன், கயல்வழி, தலைவி, ஆசிரியர் | வயல், குதிரை, கடல், புத்தகம், மரம் |

## கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக

### தாய்மொழிப் பற்று

(முன்னுரை – மொழி பற்றிய விளக்கம் – தாய்மொழி – தாய்மொழிப் பற்று – தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர் – சாதுவன் வரலாறு – நமது கடமை – முடிவுரை)

**முன்னுரை:**

அன்னைத் தமிழ்! இன்பத் தமிழ்! இனிய தமிழ்! பைந்தமிழ்! செந்தமிழ்! என பலவாறு போற்றிப் பேசும் நம் தாய் மொழியாம் தமிழ் மொழி பற்றி இக்கட்டுரையில் ஆய்வதே நம் சீரிய நோக்கமாகும்.

**மொழி பற்றிய விளக்கம்:**

மனிதன் தன் எண்ணங்களை மனித உணர்ச்சிகளை பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக அவனால் உருவாக்கப்பட்டதே மொழியாகும். வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சு மொழியாகும். கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டு படிக்கப்படுவது எழுத்துமொழியாகும்.

**தாய்மொழி:**

அவரவர் தாய் மொழியே அவரவர்க்கு உயர்வாகும். தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒவ்வொருவரும் தமிழின் பெருமையை, அதன் தொன்மையை கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும். தாய்மொழி மூலம் கல்வி கற்றால் உணர்ச்சியும் உணர்வும் ஒரு சேர மனித இனத்தினை உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**தாய்மொழிப் பற்று:**

தன்னிகரில்லாத தமிழ் என்றும் "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" – (தமிழ்விடு தூது)

'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்றும் பாரதிதாசன் பைந்தமிழ் இனிமையை போற்றிப் பாடுகிறார். எண்ணற்ற வேர்ச் சொற்களால் புதிய புதிய சொற்களை ஆக்கிக் கொள்ளும் திறன் படைத்தது, தமிழ்.

தமிழின் எழுத்து வகைப்பாடும் வரிசை முறையும் மொழியியலாளரையும் வியக்க வைப்பன.

**தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர்:**

(i) சூரிய நாராயண சாஸ்திரி என்ற தன்னுடைய பெயரை பரிதிமாற் கலைஞர் என மாற்றிக் கொண்டவர். தாய்மொழி மீது மிகுந்த பற்றும் அக்கறையும் கொண்டவர்.

(ii) வேதாச்சலம் என்ற தம் பெயரை மறைமலையடிகள் என மாற்றிக் கொண்டவர். செந்தமிழில் கட்டுரைகள் எழுதி புகழ் பெற்றவர்.

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**நமது கடமை:**

(i) தாய்மொழியில் கல்வி கற்க வேண்டும்.

(ii) தாய்மொழியில் சொற்களஞ்சியம் பெருக வேண்டும்.

(iii) தாய்மொழியில் சாதனைகள் பல படைக்க வேண்டும்.

**முடிவுரை:**

ஒண்டமிழ், வான் தமிழ், தேன் தமிழ், பைந்தமிழ் என்ற பலவாறு போற்றிப் புகழ்பாடும் தாய் மொழியாம் தமிழில் எண்ணற்ற கருத்துக் குவியல்கள் பொதிந்துள்ளன. அனைத்தையும் நாம் வாழ்நாளில் பயன்படுத்தி இன்புற வேண்டும்.



## மொழியோடு விளையாடு

**தொகைச் சொற்களை விரித்து எழுதுக.**

(எ.கா.) இருதிணை – உயர்திணை, அஃறிணை

1. **முக்கனி** : மா, பலா, வாழை
2. **முத்தமிழ்** : இயல், இசை, நாடகம்
3. **நாற்றிசை** : கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
4. **ஐவகை நிலம்:** குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை
4. **அறுசுவை** : இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, துவர்ப்பு, கசப்பு, உவர்ப்பு

### ஒரே சொல் வருமாறு கட்டங்களில் எழுதுக

**கட்டங்களிலுள்ள எழுத்துகளை மாற்றி, மேலிலிருந்து கீழாகவும் இடமிருந்து வலமாகவும் எழுதினால் ஒரே சொல் வருமாறு கட்டங்களில் எழுதுக.**

(எ.கா.)

| | | |
|---|---|---|
| கை | எ | து |
| ற | து | வி |
| னை | கை | வி |

→

| | | |
|---|---|---|
| எ | து | கை |
| து | ற | வி |
| கை | வி | னை |

| | | |
|---|---|---|
| கு | ம | த |
| ந் | தி | த |
| ரை | கு | தி |

→

| | | |
|---|---|---|
| ம | த | கு |
| த | ந் | தி |
| கு | தி | ரை |

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores


## இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக

(எ.கா.) அரசுக்குத் தவறாமல் **வரி** செலுத்த வேண்டும்.

ஏட்டில் எழுதுவது **வரி** வடிவம்.

1. மழலை பேசும் **மொழி** அழகு.

   இனிமைத் தமிழ் **மொழி** எமது

2. அன்னை தந்தையின் கைப் பிடித்துக் குழந்தை **நடை** பழகும்.

   அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்குமொழி **நடை**.

3. நீ அறிந்ததைப் பிறருக்குச் **சொல்**.

   எழுத்துகள் தொடர்ந்து நின்று பொருள் தருவது **சொல்**.

4. உழவர்கள் நாற்று **நட** வயலுக்குச் செல்வர்.

   குழந்தையை மெதுவாக **நட** என்போம்.

5. நீதிமன்றத்தில் தொடுப்பது **வழக்கு.**

   'நீச்சத் தண்ணி குடி' என்பது பேச்சு **வழக்கு.**

## நிற்க அதற்குத் தக

### என் பொறுப்புகள்

1. கடிதங்கள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதும்போது திருத்தமான நடையையே கையாள்வேன்.
2. பொம்மலாட்டம், தெருக்கூத்து போன்ற நாட்டுப்புறக் கலைகளைப் போற்றுவேன்.

## கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| 1. ஊடகம் | - Media | 5. பருவ இதழ் | - Magazine |
| 2. மொழியியல் | - Linguistics | 6. பொம்மலாட்டம் | - Puppetry |
| 3. ஒலியியல் | - Phonology | 7. இதழியல் | - Journalism |
| 4. எழுத்திலக்கணம் | - Orthography | 8. உரையாடல் | - Dialogue |

☆ ☆ ☆

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores





# அலகுத் தேர்வு

**நேரம் : 60 நிமிடங்கள்** **மதிப்பெண்கள் : 25**

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** (3 × 1 = 3)

1. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ................... .

அ) வான் ஒலி ஆ) வானொலி

இ) வாவொலி ஈ) வானெலி

2. வானில் ................... கூட்டம் திரண்டால் மழை பொழியும்.

அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்

3. தமிழின் கிளைமொழிகளில் ஒன்று ...................... .

அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** (3 × 1 = 3)

4. விசும்பு என்பதன் பொருள்...............

5. பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் ...........

6. .......... என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை.

**III. பொருத்துக.** (4 × ½ = 2)

7. ஊக்கிவிடும் - நோன்பு
8. பொழிகிற - ஊக்கப்படுத்தும்
9. குறி - தருகின்ற
10. விரதம் - குறிக்கோள்

**IV. பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.** (2 × ½ = 1)

11. பசு, விடு, ஆறு, கரு -
12. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து -

**V. பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று வரிகளில் விடையளிக்கவும்.** (3 × 2 = 6)

13. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
14. 'ஒன்றல்ல இரண்டல்ல' - பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.
15. பேச்சுமொழி என்றால் என்ன?
16. முதல் எழுத்து என்றால் என்ன?

**VI. பின்வரும் வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஆறு வரிகளில் விடையளிக்கவும்.** (2 × 3 = 6)

17. கவிஞர் தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?
18. தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?
19. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

**VII. அடிமாறாமல் எழுதுக.** 4

20. 'எங்கள் தமிழ்' பாடலைச் செய்யுள் வடிவில் எழுதுக.

☆ ☆ ☆



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000